**கவனிக்க.-** 2015.01.30 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி I, பகுதி I : தொகுதி (IIஅ), பகுதி III மற்றும் பகுதி (IVஅ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி V இல் அச்சீட்டாளர் மற்றும் பிரசுரிப்பாளர்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதியப்பட்டுள்ள 2012 ஆம் வருடத்தின் காலாண்டின் (ஏப்பிறல்-யூன்) அச்சிடப்பட்டுள்ள புத்தகப் பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1901 - 2015 පෙබරවාරි මස 06 වැනි සිකුරාදා - 2015.02.06

1901 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 154 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 156 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 155 | ஏல விற்பனைகள் | 160 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபை (நீக்கல்) சட்டமூலம் 2015, சனவரி மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

**இலங்கைப் புகையிரத சேவைகளின் எஸ்-9 டீசல் தொகுக்கப்பட்ட அலகுகள் (பவர் செற்கள்) புகையிரதத்திற்கான புதிய கார் கட்டுப்பாட்டு முறைமையொன்றை வடிவமைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்கான பெறுகை**

பெறுகை இல. எஸ்.ஆர்.எஸ்./எவ். 7008

இலங்கைப் புகையிரத சேவைகளின் டீசல் தொகுக்கப்பட்ட அலகுகளை (பவர் செற்கள்) பழுதுபார்ப்பதற்காக உற்பத்தியாளர்கள்/ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஏனைய இயலுமையுள்ள அமைப்புகளிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை, இலங்கை, கொழும்பு 10, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, 1 ஆம் இலக்கத்திலுள்ள போக்குவரத்து அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுவின் தவிசாளர் பெற்றுக்கொள்வார். விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை நேரடியாகவோ அல்லது அற்றோணித் தத்துவத்தினால் உரித்தாக்கப்பட்டுள்ள இலங்கையில் பதிவுபெற்றுள்ள அங்கீகாரம் பெற்ற முகவரூடாகவோ சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்கள் 2015.02.19 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணமாக 5,000 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர் 2015.02.18 ஆந் திகதி பி. ப. 3.00 மணி வரை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் விலைமனு படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கள் அவைகளை மூடியவுடனேயே இலங்கை, கொழும்பு 10, புகையிரத தலைமையலுவலக அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும்போது விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாகவும் ஒப்படைக்கப்படலாம் :-

தவிசாளர்,
அமைச்சுப் பெறுகைக் குழு,
செயலாளர் மே./பா.,
போக்குவரத்து அமைச்சு,
இல. 1, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. விலைமனு ஆவணங்களை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிடலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு பின்வருபவருடன் தயவுசெய்து தொடர்புகொள்ளவும் :-

புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்,
த. பெ. இல. 1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு,
இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2473328.
தொலைநகல் இலக்கம் : 94(11)2432044
மின் - அஞ்சல் : srs.slr@gmail.com
இணையத்தளம் : www.railway.gov.lk

தவிசாளர்,
அமைச்சுப் பெறுகைக் குழு,
இலங்கைப் புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. SRS/F.7008.

2-86

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் – வவுனியா

பகிரங்க ஏல விற்பனை

வவுனியா நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட/ உரிமை கோரப்படாத கீழ்க்காட்டப்பட்ட பொருட்கள் 2015.03.14 ஆந் திகதியன்று சனிக்கிழமை மு. ப. 9.30 மணிக்கு இந்நீதிமன்ற வளவில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இப்பொருட்களுக்கான உரிமை கோருபவர்கள் எவருமிருந்தால் ஏல விற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும்.

2. பொது மக்கள் எவரும் இந்நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிடப்பட்ட பொருட்களை ஏலவிற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

3. இப்பொருட்கள் எவற்றையேனும் விற்பனையிலிருந்து மீளப்பெறுவதற்கு இந்நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு.

4. பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தைச் செலுத்தி உரிய பொருட்களை நீதிமன்ற வளவிலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். சகல கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்த வேண்டும்.

5. பொருட்களை விலைக்கு வாங்குவோர் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய ஆள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

வீ. இராமகமலன்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
வவுனியா.
2015, சனவரி 13.

### பகிரங்க ஏல விற்பனைப் பொருட்கள்

| தொ. இல. | வழக்கு இல. | பொருட்கள் | அளவு |
|---|---|---|---|
| 1. | 93087 | அலவாங்கு | 01 |
| 2. | 73339 | அலவாங்கு | 01 |
| 3. | 72979 | அலவாங்கு | 01 |
| 4. | 95668 | அலவாங்கு | 01 |
| 5. | 69238 | அலவாங்கு | 01 |
| 6. | 93542 | அலவாங்கு | 01 |
| 7. | 88526 | அலவாங்கு | 02 |
| 8. | 88613 | அலவாங்கு | 01 |
| 9. | 95544 | அலவாங்கு | 01 |
| 10. | 85672 | அலவாங்கு | 01 |
| 11. | 88529 | அலவாங்கு | 01 |
| 12. | 90635 | அலவாங்கு | 01 |
| 13. | 69238 | அலவாங்கு | 02 |
| 14. | 90553 | அலவாங்கு | 01 |
| 15. | 87811 | அலவாங்கு | 01 |
| 16. | 93087 | அலவாங்கு | 02 |
| 17. | 97070 | அலவாங்கு | 01 |
| 18. | 98701 | அலவாங்கு | 02 |
| 19. | 96180 | கோடாரி | 01 |
| 20. | 50372 | கோடாரி | 01 |
| 21. | 94563 | கோடாரி | 01 |
| 22. | 92635 | கோடாரி | 01 |
| 23. | 53851 | கோடாரி | 01 |
| 24. | 96636 | கோடாரி | 01 |
| 25. | 89746 | கோடாரி | 01 |
| 26. | 52754 | கோடாரி | 01 |
| 27. | B99/14 | கோடாரி | 01 |
| 28. | 97862 | கோடாரி | 01 |
| 29. | 98701 | கோடாரி | 01 |
| 30. | 42207 | காட்டுக்கத்தி | 01 |
| 31. | 62893 | காட்டுக்கத்தி | 01 |
| 32. | 88526 | காட்டுக்கத்தி | 01 |
| 33. | 74800 | காட்டுக்கத்தி | 01 |
| 34. | 88268 | காட்டுக்கத்தி | 01 |
| 35. | 72889 | காட்டுக்கத்தி | 01 |
| 36. | 76044 | காட்டுக்கத்தி | 01 |
| 37. | 86426 | காட்டுக்கத்தி | 01 |
| 38. | 88576 | பிக்கான் | 01 |
| 39. | 95668 | பிக்கான் | 02 |
| 40. | 71166 | பிக்கான் | 01 |
| 41. | 89360 | பிக்கான் | 01 |
| 42. | 98701 | பிக்கான் | 01 |
| 43. | 94639 | மண்வெட்டி | 01 |
| 44. | 73339 | மண்வெட்டி | 02 |
| 45. | 82492 | மண்வெட்டி | 01 |
| 46. | 98701 | மண்வெட்டி | 05 |
| 47. | | மண்வெட்டி | 01 |
| 48. | 95668 | மண்வெட்டி | 01 |
| 49. | 54016 | சிலசு | 01 |
| 50. | 93087 | சிலசு | 01 |
| 51. | 73339 | சிலசு | 01 |
| 52. | 98701 | சிலசு | 01 |
| 53. | - | சிலசு | 04 |
| 54. | - | டிலிவரி பைப்சுருள் | 02 |
| 55. | - | MEC/ வர்க்க தொலைக்காட்சி | 01 |
| 56. | - | சிங்கர் தையல் இயந்திரம் | 01 |
| 57. | - | 1 1/2 அங்குல தண்ணீர் இறைக்கும் மோட்டார் | 01 |
| 58. | - | மின்சாரத்தில் இயங்கக் கூடிய பெரிய மோட்டார் | 01 |
| 59. | 56473 | லுமாலா வர்க்க 55707067 இலக்கமுடைய துவிச்சக்கர வண்டி | 01 |
| 60. | 1536/12 | வாயு சிலிண்டர் | 01 |
| 61. | 1845/12 | வாயு சிலிண்டர் | 01 |
| 62. | 57247 | லுமாலா வர்க்க 5556219 இலக்கம் உடைய துவிச்சக்கர வண்டி | 01 |
| 63. | 93827 | கைத்தொலைபேசி (மைக்ரோமெக்ஸ்) | 01 |
| 64. | 98282 | கைத்தொலைபேசி (ஈட்ரெல்) | 01 |

| தொ. இல. | வழக்கு இல. | பொருட்கள் | அளவு |
|---|---|---|---|
| 65. | 97437 | கைத்தொலைபேசி (கிரீன்ரெல்) | 01 |
| 66. | 95791 | கைத்தொலைபேசி (நொக்கியா) | 01 |
| 67. | 97160 | கைத்தொலைபேசி (அஜ்-ட்ரெல் லீடர்) | 01 |
| 68. | 97260 | கைத்தொலைபேசி (நொக்கியா) | 01 |
| 69. | 97621 | கைத்தொலைபேசி | 01 |
| 70. | 95626 | கைத்தொலைபேசி (நொக்கியா) | 01 |
| 71. | 96879 | கைத்தொலைபேசி | 01 |
| 72. | 97788 | கைத்தொலைபேசி | 01 |
| 73. | 98062 | கைத்தொலைபேசி | 01 |
| 74. | 97436 | கைத்தொலைபேசி (நொக்கியா) | 01 |
| 75. | 98188 | கைத்தொலைபேசி | 01 |
| 76. | 97620 | கைத்தொலைபேசி | 01 |
| 77. | 97797 | கைத்தொலைபேசி (நொக்கியா) | 01 |
| 78. | 97379 | கைத்தொலைபேசி (நொக்கியா) | 01 |
| 79. | 97379 | கைத்தொலைபேசி (மைக்ரோமெக்ஸ்) | 01 |
| 80. | - | சூரிய மின்கலம் | 01 |

2-122

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பாக பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : சதர்ன் ஹவுஸ் என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 103022
*பதிவு முகவரி* : இல. 218/37, வல்பிற்ற, பட்டவள, பாதுக்க

2-35

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : த ஆர்க் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 103218
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015.01.07
*பதிவு அலுவலகம்* : இல.329/122, 2 ஆவது ஒழுங்கை, லேக் கிரசன்ட், அத்திட்டிய

*கம்பனியின் பெயர்* : லெவல் லொக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 103370
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015.01.20
*பதிவு அலுவலகம்* : இல. 125, தெகிவளை வீதி, பொரலஸ்கமுவ

பினான்சியல் அன்ட் பிசினெஸ் அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2-191

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2014, கார்த்திகை மாதம் 12 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : பி பீ ஓ மாஸ்டர் சொலுசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 102170
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 45/25எச், ஹிக்கஹாவத்த மாவத்தை, பெப்பிலியான

நிறுவனத்தின் முகாமையாளர்,
எச். டீ. சீ. டீ. விஜேசிங்க,
கம்பனிச் செயலாளர்.

2-155

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஓ எஸ் எஸ் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 100005
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.07.31
*பதிவு முகவரி* : இல. 53ஏ, கடவல வீதி, பன்னிப்பிட்டிய

பணிப்பாளர்.

2-152

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : டீஎப்சீசீ பாங்க் பீஎல்சீ
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீபி 233
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 73/5, காலி வீதி, கொழும்பு 3
*கூட்டிணைப்புத் திகதி* : 2015.01.06

ஆர். ஏ. பீ. வித்தான,
கம்பனிச் செயலாளர்.

*2-135*

---

## யுனைட்டெட் டெண்ட்றோ எனர்ஜி (பிறைவேட்) லிமிட்டெட் (பீவீ 16903) இன் முதலீட்டாளர்களினால் சுயவிருப்பத்துடன் முடிவுறுத்தல் கூட்டத்திற்கான அறிவித்தல்

பின்வரும் நோக்கங்களுக்காக இராஜகிரிய, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, 100/1 ஆம் இலக்கத்தில் 2015, பெப்புருவரி மாதம் 9 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மேலே பெயர் குறிப்பிட்டுள்ள கம்பனியின் முதலீட்டாளர்களினால் கூட்டமொன்று நடைபெறுமென 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் 344(2) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது :-

கம்பனியின் தற்போதைய நிலைமை மீள்நோக்கிடல் ;
கம்பனியின் முதலீட்டாளர்களினால் சுய விருப்பத்துடனான முடிவுறுத்தலை அங்கீகரித்தல்/பரிசீலித்தல் ;
2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 335 ஆம் பிரிவின் பிரகாரம் கலைப்பாளர் ஒருவரை நியமித்தல்.

யுனைட்டெட் டெண்ட்றோ எனர்ஜி (பிறைவேட்) லிமிட்டெட்
பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எல்ஓஎல்சீ கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*2015, சனவரி 19.*

*2-129*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஹலோயா மைன் ஹைட்ரோ (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 101563
*பதிவு முகவரி* : களுகல, பிட்டவெல

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

*2-112*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ரத்தெல்ல ஜெம்ஸ் அன்ட் ஜுவலரி (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 102567
*பதிவு முகவரி* : கலம்போ கோல்ட் சென்ரர், இல. 82, சுப்பர் மார்க்கட், அப்துல் காதர் மாவத்தை, புறக்கோட்டை, கொழும்பு

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

*2-111*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் 7 ஆம் இலக்கப் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : மாஸ்டர் ஹோல்டிங் அயகம (பீவீரீ) எல்ரீடி
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 103152
*கம்பனியின் முகவரி* : இல. 306/5, மஹல்வராவ, பன்னிப்பிட்டிய

*2-110*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஜே ஏ எஸ் லங்கா ஒயில் (பீவீரீ) எல்ரீடி
*பதிவிலக்கம்* : பீவீ 101226
*பதிவு முகவரி* : இல. 61/101, ஹந்தானை வீதி, கண்டி

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

*2-109*

## பொறுப்பு வரையறுத்த கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : லங்கா பயோ ஃபேர்ட்டிலய்சர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 96947
*திகதி* : 07.02.2014
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 377/5பி, வெல்சிறி மாவத்தை, ஹோகந்தர தெற்கு, ஹோகந்தர

பிஸ்னஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் வீதி,
கொழும்பு 02,
2014, பெப்புருவரி 18.

2-39

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : பிளான் மை கெப் இயர் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு முகவரி* : இல. 21/7, நுகேதுடுவ வீதி, பொல்வத்த, அம்பலங்கொட
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2014.11.19
*பதிவு இலக்கம்* : பீவீ 102235

கம்பனிச் செயலாளர்.

2-28

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : அல் அதாஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 102608
*ஒருங்கிணைக்கப்பட்ட திகதி* : 2014.12.04
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : இல. 65ஏ, விஹார மாவத்தை, கொலன்னாவ

கம்பனிச் செயலாளர்.

2-27

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ், டில்மா மொடன் ட்றேடிங் மோட்டார் (பிறைவேட்) லிமிட்டெட் பற்றி பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் இலக்கம்* : பீவீ 103242
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 546/3, மிஹிந்து மாவத்தை, அத்துருகிரிய பாதை, மாலபே

2-224/1

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ், டில்மா கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் பற்றி பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் இலக்கம்* : பீவீ 103353
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 546/2, மிஹிந்து மாவத்தை, அத்துருகிரிய பாதை, மாலபே

2-224/2

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ், பெற்றோலியம் சிஸ்ரம் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட் பற்றி பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் இலக்கம்* : பீவீ 103244
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 546/4, மிஹிந்து மாவத்தை, அத்துருகிரிய பாதை, மாலபே

2-224/3

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ், தேசிங்க பதிரகே மோட்டார் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் பற்றி பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் இலக்கம்* : பீவீ 103243
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 546/5, மிஹிந்து மாவத்தை, அத்துருகிரிய பாதை, மாலபே

2-224/4

## பொறுப்பு வரையறுத்த கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சீ டீ புரொபட்டீஸ் வொக்ஷோல் (பிறைவேட்) லிமிட்டெட்

கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 96645

திகதி : 23.01.2014

கம்பனியின் பதிவு முகவரி : 28 ஆம் மாடி, மேற்கு கோபுரம், உலக வர்த்தக மையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1

பிஸ்னஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் வீதி,
கொழும்பு 02,
18.02.2014.

2-40

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை, இராஜகிரிய, நாணயக்கார மாவத்தை, கோத்தமி இடம், இலக்கம் 133/11ஏ என்ற முகவரியையும், 653251238V ஆம் இலக்கமுடைய தேசிய ஆள் அடையாள அட்டையை உடையவருமான சிறிலால் பராக்கிரம மெண்டிஸ் ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு எஸ். ஜே. அமதோரு என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2006, பெப்புருவரி மாதம் 9 ஆந் திகதியையும் 763 ஆம் இலக்கத்தையுடையதும் மேற்கூறப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இராஜகிரிய, நாணயக்கார மாவத்தை, கோத்தமி இடம், இலக்கம் 133/11ஏ என்ற முகவரியையும், 408620694V ஆம் இலக்க தேசிய ஆள் அடையாள அட்டையை உடையவருமான கீத்தான ஜயசேகர மெண்டிஸ் என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இத்தால் இல்லா தொழிக்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்டதுடன் இன்று முதற்கொண்டு இந்த அற்றோணித் தத்துவத்தின் மூலம் எவ்வித கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்பேற்கமாட்டேன் என பொது மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இத்தால் அறிவிக் கின்றேன்.

சிறிலால் பராக்கிரம மெண்டிஸ்.

2-216

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 40, நீர்கொழும்பு வீதி, வத்தளையை இருப்பிடமாகக் கொண்ட நித்தியானந்தன் சோமசுந்தரமூர்த்தி (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 670620875V) ஆகிய நான் இத்தால் அறியத்தருவது யாதெனில், 30.05.2013 ஆந் திகதியன்று எம். சசாங்கன் நொத்தாரிசினால் நிறைவேற்றப்பட்ட 996 ஆம் இலக்க விசேட அதிகார தத்துவப்பத்திரம் மூலம் 364 ஆம் இலக்கம், அழுத் மாவத்தை வீதி, கொழும்பு 15 ஐச் சேர்ந்த நித்தியானந்தம் ஜீவானந்தம் (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 691670686V) என்பவருக்கு அளித்த அனைத்து அதிகாரங்களையும் 29.12.2014 முதல் இல்லாதொழிப்பதாகவும் இரத்துச் செய்வதாகவும் அறியத்தருகிறேன்.

நித்தியானந்தன் சோமசுந்தரமூர்த்தி.

2-159

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அம்பலன்கொடை, ஊரவத்த, “ஸ்ரீயாவாஸ”வில் வசிக்கும் நல்லாஹன்தி ஸிட்னி பியதாச த சில்வா ஆகிய என்னால் அம்பலன்கொடை, ஊரவத்த, ‘ஸ்ரீயாவாஸ”வில் நல்லாஹன்தி வொலீ பியதாச த சில்வா என்பவருக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு திரு. என். டபிள்யூ. த சில்வா என்பவ ரால் எழுதி உறுதிப்படுத்திய 336 ஆம் இலக்க இலக்க 2012.12.15 ஆந் திகதியுடைய அற்றோணி அதிகாரப்பத்திரத்தை உடனடியாக அமுலுக்கு வருமாறு இத்தால் இரத்துச்செய்யப்பட்டுள்ளது என்பதையும் மேற்படி நல்லாஹன்தி வொலீ பியதாச த சில்வா என்பவரால் மேற்படி அற்றோணி அதிகாரத்தின்படி இதற்குப் பின்னர் மேற்கொள்ளப் படுகின்ற எந்தச் செயலுக்கும் நான் பொறுப்புக் கூற மாட்டேன் என்பதையும் இது தொடர்பான எந்தப் பொறுப்புகளுக்கும் நான் இணைய மாட்டேன் என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

நல்லாஹன்தி ஸிட்னி பியதாச த சில்வா.

2-22

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 10, மாளிகாவத்தை மாடி வீடு, இல. 2/4 பி51 ஐக் கொண்ட இடத்தில் வதியும் குசல புஷ்பகுமார தென்னக்கோன் ஆகிய நான் கொழும்பு 10, மாளிகாவத்தை மாடி வீடு, எம் 4/5 ஐக் கொண்ட இடத்தில் வதியம் சுதித் சமன்த ரஸ்னு தென்னக்கோன் (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 630182042V) என்பவருக்கு அற்றோணி தத்துவம் வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு திரு. ஜீ. மஹிந்தவினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 255 மற்றும் 2001 ஆம் ஆண்டு யூலை 20 ஆந் திகதி கொண்ட அற்றோணித் தத்துவத்துக்கு உரித்துடையதாக என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு செயல் வலுவற்றதாக்கப்படுகின்றது என்பதனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன். இதன் பின்னர் எனது சார்பில் எனது அற்றோணி தத்துவதாரரினால் செய்யப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் என்னால் வகை கூறப்பட மாட்டாது என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

குசல புஷ்பகுமார தென்னக்கோன்.

2-179

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாத்தறை, வெலிவேரிய சரம் முதலி மாவத்தையின் அம்பகஹ கொரட்டுவ எனும் விலாசத்தில் வசிக்கும் இந்திரசிரி கமல்கொட லியனகே ஆகிய நான், அதே விலாசத்தில் வசிக்கும் சோமசிரி கமல்கொட லியனகே ஆகியோருக்கு அதிகாரம் வழங்கப்பட்டு பதிவாக்கப் பட்டுள்ளதும், பிரசித்திபெற்ற நொத்தாரிசு பிந்து விக்ரமசேகர அவர்களினால் எழுதப்பட்ட 1995.05.20 ஆந் திகதிய 142 ஆம் இலக்க அற்றோணி உத்தரவுப்பத்திரத்தை இத்தால் இரத்துச்செய்து தகுதியற்றதாக்குகின்றேன். இதனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அனைத்து மக்களுக்கும் தெரிந்துகொள்ளும் விதத்தில் அறியத்தருகின்றேன்.

இதனையடுத்து மேற்குறித்த சோமசிரி கமல்கொட லியனகே என்பவரினால் எனக்காகச் செய்யப்படும் எச்செயற்பாடு தொடர்பாகவும் மற்றும் உட்படும் எந்தவொரு ஒப்பந்தம் தொடர்பாகவும் நான் பொறுப் பேற்க மாட்டேன் என்பதையும் இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

இந்திரசிரி கமல்கொட லியனகே.

2-03

## ஏல விற்பனைகள்

**மக்கள் வங்கி - கடவத்தை கிளை**
(நிறுவன வங்கிப் பிரிவு)

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்துக்கள் ஏல விற்பனை**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளே, அதிகாரி பற்று, மஹர பிரதேச சபை எல்லைகளுக்குள் அமைந்துள்ள கொணாஹேன கிராமத்தில் மில்லகஹவத்த என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. எம். லீலாரத்ன அவர்களால் வரையப்பட்ட, 2000 ஆம் ஆண்டு சனவரி மாதம் 5 ஆந் திகதியிடப்பட்ட, 24 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு ஏ எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு-**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 2றூ. 29பே.)**

**மேலே கூறப்பட்ட 24 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய கம்பஹா காணிப்பதிவகத்தில் சீ628/147 மற்றும் 628/623 ஆம் இலக்கங் களின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதிலுள்ள கட்டிடங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக.**

**ஆதனத்தைச் சென்றடையும் வழி.**- கொழும்பிலிருந்து கண்டி வீதி வழியாக 18 கிலோ மீற்றர் தூரம் வரை கொணாஹேன வீதி வரை செல்லவும். அங்கிருந்து சுமார் 2.5 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மஹாகடே சந்திவரை பயணிக்கவும். அங்கு இடது பக்கத்தில் உள்ள மீகஹவத்த வீதிக்குத் திரும்பி சுமார் 1.5 கிலோ மீற்றர் வரை செல்லவும். குறிப்பிட்ட சொத்து இடதுபக்கத்தில் அமைந்துள்ளது.

மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

(மேற்குறிப்பிட்ட சொத்து காமன்ட் குரூப் 5 (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்டது)

**தீர்மான அறிவித்தலுக்கு.**- தீர்மான அறிவித்தலுக்கு தயவுசெய்து 2010, மே மாதம் 31 ஆந் திகதிய செய்திப் பத்திரிகைகளைப் பார்வையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக முழுமையாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி, விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும் ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் இல. 35, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் உள்ள மக்கள் வங்கி, கூட்டுறவு வங்கிப் பிரிவின் பிரதம முகாமையாளர்-அறவீடுகள் அவர்களிடம் செலுத்தப்பட வேண்டும். தொலைபேசி இல. : 2320651-6, 2437239-41.

காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் மேற்கூறப்பட்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும், உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
123 வருடகால சேவை அனுபவம்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680 2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

2-186

### சம்பத் வங்கி பீ எல் சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை**

ஏ. எல். எம். சூஃபி மற்றும் ஜே. முஃபீதா – கணக்கு இல. 0112 5000 0679

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2014.10.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2015.01.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2014.12.12 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலன்ட்'', ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல் களுக்கிணங்க நிலுவை முதலான, ஐம்பத்துநான்கு இலட்சத்து ஏழாயிரத்து முந்நூற்றறுபத்தொரு ரூபா தொண்ணூற்றிரண்டு சதம் (ரூ. 54,07,361.92) 2014, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை நாற்பத்தொன்பது இலட்சம் ரூபா (ரூ. 49,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்தொன்பது வீதம் (19%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2015.02.25 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.*

**அட்டவணை**

*கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், நிந்தவூர்ப்பத்து, நிந்தவூர் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் எல்லைகளுக்குள் நிந்தவூர் கிராம அலுவலர் பிரிவில், அமைந்த ''தாமரைக்குளம் வெட்டுக்காடு'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். முஹாரூஃப் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008, யூன் 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 3878 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடக்கு : பீ. ரீ. ஏ. உஸ்னார் லெப்பே இற்குச் சொந்தமான காணி ; கிழக்கிற்கு : குறிப்பிடப்பட்ட வரைபடத்தின் லொட் 2 ; தெற்கு : பிரதான வீதி வரையுமான வழி உரிமைகளுடன் கூடிய யூ. எல். மரியன்கந்துவிற்கு சொந்தமான காணி (திட்டமிடப்பட்ட நிந்தவூர் பொது சந்தை) மற்றும் ; மேற்கு : வயற் காடு ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசா தங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கல்முனை காணிப் பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் L 82/70 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*அண்மைய நில அளவீட்டிற்கமைவாக 2013, சனவரி 07 ஆந் திகதியிடப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆஹாமட் எம். மாஹாரூஃப் என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 13011 எனும் வரைபடத்தில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.*

*மேற்கூறப்பட்ட நிந்தவூர்ப்பற்று, நிந்தவூர் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் எல்லைகளுக்குள் அமைந்த ''தாமரைக்குளம் வெட்டுக்காடு'' என்றழைக்கப்படும் காணியின் எல்லகளாவன– வடக்கு : பீ. ரீ. ஏ. உஸ்னார் லெப்பே இற்குச் சொந்தமான காணி ; கிழக்கிற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆஹாமட் எம். மாஹாரூஃப் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008, யூன் 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 3878 எனும் வரைபடத்தின் லொட் 2 ; தெற்கு : வீதி மற்றும் ; மேற்கு : எஸ். இப்ரா லெப்பே உரிமை கோரும் காணி ஆகிய இவ் எல்லகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) அல்லது 0.101 ஹெக்டேயர் ஆகும்.*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

*2-184*

---

### சம்பத் வங்கி பீ எல் சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை**

ஏ. எல். மோஹோமட் – கணக்கு இல. 0161 5000 0096

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2014.10.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2014.12.19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2014.12.05 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலன்ட்'', ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப் பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, எண்பத்திரண்டு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து தொளாயிரத்தறுபத்தொரு ரூபா ஐம்பது சதம் (ரூ. 82,32,961.50) 2014, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை முப்பத்துமூன்று இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா (ரூ. 3,75,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்தொன்பது வீதம் (19%) மேலும் இருபது இலட்சம் ரூபா (ரூ. 20,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபது வீதம் (20%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2015.02.23 ஆந் திகதி பி. ப. 3.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.*

அட்டவணை

ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், வெல்லஸ்ஸப் பிரிவின் பிபிலே பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்குள் வேகம்பத்து கோரளையின் அமைந்த "தெவனெலந்த" என்றழைக் கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. பீ. அத்தநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000, திசெம்பர் 25 ஆந் திகதியிடப்பட்ட இல. MO/455 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். கே. குணசேக்கர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996, ஓகத்து 18 ஆந் திகதியிடப்பட்ட இல. 626 எனும் வரைபடத்தின் லொட் 5B ; கிழக்கு : குறிப்பிடப்பட்ட இல. 626 இல் லொட் 04 ; தெற்கு : வீதி ; மற்றும் ; மேற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. பீ. அத்தனாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000, ஒற்றோபர் 08 ஆந் திகதியிடப்பட்ட இல. 438 எனும் வரைபடத்தின் லொட் 1 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஆறு தசம் ஆறு ஏழு பேர்சஸ் (0ஏ. 0றா. 6.67பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டங்களுடன் அதன் கண் அமைந்த சகல வீதி உரிமைகள், சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் மொனகராகலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் K72/301 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

2-185

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ — நகர அலுவலக கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-

அட்டவணை

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லேபத்து சல்பிட்டி கோரலேயில் தெஹிவளை-கல்கிசை மாநகர சபை எல்லையில் கட்டிட இலக்கம் 69, ஸ்ரீ சரணங்கர றோட், தற்சமயம் கட்டிட இலக்கம் 96ஏ, 69ஏ-2/1, ஸ்ரீ சரணங்கர றோட், வாட் இலக்கம் 6, ஸ்ரீ சரணங்கர றோட், கலுபோவில கிராமத்தில் அமைந்துள்ள மாபிட்டியகும்புர (நில காணி அதிபரின் 1992.03.18 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 5708 இல் காண்பிக்கப்பட்ட லொட் 2, இக்காணியை மீண்டும் அளந்து) நில அளவையாளர் ஜீ. பி. தொடன்வெல 1997.07.15 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2673 இல் காட்டப்பட்ட லொட் ஏ இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றா. 06.07பே.; அல்லது ஹெக்டெயர் 0.01535)**

மேற்படி காணியை கடன் எடுத்த மொஹமட் உயுசேயிப் மேற்படி காணியை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளார்.

மேற்சொல்லப்பட்ட காணி 2015, பெப்புருவரி 25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் என்னால் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2013.11.08 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2013.11.11 ஆந் திகதிய "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும், ஏலவிற்பனை விளம்பரத்திற்காக 2015.02.06 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2015.02.09 ஆந் திகதிய "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடையும் விதம்.**- காலி றோட்டில் இருந்து தெஹிவளை ஆஸ்பத்திரி றோட் சந்திவரை சென்று இடதுபக்கம் திரும்பி ஆஸ்பத்திரி றோட்டில் ஸ்ரீ சரணங்கர றோட் வரை சென்று இந்த றோட்டில் 400 மீற்றர் தூரம் சென்று காணியை அடைய முடியும்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- வெற்றி பெற்ற கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;
(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகத்தில் அல்லது மொரட்டுவை கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக.- முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 21, சேர் ராசிக் பரீட் மாவத்தை, கொழும்பு 01. தொலைபேசி இல. : 011-2486770 ; தொலைநகல் இல. : 011-2347717.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 182,
3 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. : 011-2445393.

2-157

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ — அம்பாந்தோட்டை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-

முதலாவது அட்டவணை

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மெதபத்து சியனே கோரலையில் கம்பஹா நகர சபை எல்லையில் கெல்வத்துகொட கிராமத்தில் அமைந்துள்ள யக்கல எஸ்ட்டேட் காணிக்கு நில அளவையாளர் யூ. எம். ஆரியசேன அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2005.02.20 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 1953ஏ இல் காட்டப்பட்ட லொட் ஏ அங்குள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கை அதனகத்தேயுள்ள அனைத்தும் மற்றும் எல்லாவகையான போக்குவரத்துக்காகவும் சென்று வரவும், திரும்பிப் போகவும், வாகனங்கள் செல்லவும் மற்றும் தேவையான மின்சார இணைப்புகள், நீர்க்குழாய்கள் அமைக்கவும் மற்றும் தேவையான பொதுவான பாவனைக்கான அனைத்து பொது வசதிகள் மற்றும் பொதுவாக ரோட் என்ற வகையில் வரைபட இலக்கம் 1953ஏ இல் காண்பிக்கப்பட்ட பொது பாதையாகப் பாவிக்கும் உரிமையுடன்.**

காணியின் விஸ்தீரணம் : ஒரு றூட் ஒன்று தசம் ஒன்பது பேர்ச்
(0ஏ. 1றூ. 1.9பே.)

இரண்டாவது அட்டவணை

1. **தென் மாகாணம், காலி மாவட்டம், பெந்தொட்ட வலல்லாவிட்ட கோரல, இல. 26ஏ, இக்கல கிராமசேவையாளர் எல்லையில், எல்பிட்டிய பிரதேச செயலாளர் எல்லையில் இகல கிராமத்தில் அமைந்துள்ள இகலகந்தகெலே லொட் ஏ காணிக்கு நில அளவையாளர் தேஜசிறி 2012.05.08 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 151ஏ/2012 இல் காட்டப்பட்ட ஒன்றாக இணைக்கப் பட்ட லொட் 31 மற்றும் 31 மற்றும் இக்காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கையும் சேர்த்து**

காணியின் விஸ்தீரணம் : ஐந்து ஏக்கர்
(5ஏ. 0றூ. 0பே.; ஹெக்டெயர் 2.020)

2. **தென் மாகாணம், காலி மாவட்டம், பெந்தொட்ட வலல்லாவிட்ட கோரல, இல. 26ஏ, இக்கல கிராம அலுவலர் எல்லையில், எல்பிட்டிய பிரதேச செயலாளர் எல்லையில் இகல கிராமத்தில் அமைந்துள்ள கொஹிலகல ஓகந்த ஹேன மற்றும் குலேன்கந்த லொட் 1 மற்றும் 2 ஒன்றாக்கப்பட்ட காணிகளின் நில அளவையாளர் தேஜசிறி அவர்களினால் 2012.05.08 ஆந் திகதியுரைய வரைபட இலக்கம் 151ஏ/2012 இல் காட்டப்பட்ட லொட் ஏ, பி மற்றும் இக்காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கையும் சேர்த்து**

காணியின் விஸ்தீரணம் : ஐந்து தசம் ஐந்து சைபர் பேர்ச்சஸ்
(0ஏ. 0றூ. 5.50பே.)

3. **மற்றும் எல்லாவகையான போக்குவரத்துக்காகவும் சென்று வரவும், திரும்பிப் போகவும், வாகனங்கள் செல்லவும், வாகனங்கள் ஊடாக பொதுவான பாதையாகப் பாவிக்கும் உரிமையுடனும் மற்றும் பொதுத் தேவையான மின்சார இணைப்புகள், நீர்க்குழாய்கள், தொலைபேசி இணைப்புகள் செய்யவும். பொதுப் பாதையாக தென் மாகாணம், காலி மாவட்டம், பெந்தொட்ட வலல்லாவிட்ட கோரல, இல. 26ஏ, இக்கல கிராம அலுவலர் எல்லையில், எல்பிட்டிய பிரதேச செயலாளர் எல்லையில், எல்பிட்டிய பிரதேச எல்லையில் இகல கிராமத்தில் அமைந்துள்ள கொஹிலகல ஓகந்த ஹேன மற்றும் குலேன்கந்த காணிகளின், ஒன்றுபட்ட காணிகளின் நில அளவையாளர் தேஜசிறி அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2000.08.09 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 784ஏ இல் காட்டப்பட்ட லொட் ஏ, எச் மற்றும் இக்காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கையும் சேர்த்து**

காணியின் விஸ்தீரணம் : இரண்டு றூட் இருபத்திரண்டு பேர்ச்
(0ஏ. 2றூ. 22பே.)

*முதலாவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி கடன் எடுத்த இலங்கை கம்பனிச் சட்டப்படி அமைக்கப்பட்ட ஜே. பி. என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் காணியை ஈடுவைத்த ஹபுஆராச்சிகே கமல் தயானந்த சேனரத்ன மேற்படி காணியை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளார்.*

*இரண்டாவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி கடன் எடுத்த இலங்கை கம்பனிச் சட்டப்படி அமைக்கப்பட்ட ஜே. பி. என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் காணியை ஈடுவைத்த கம்மெத்த ஏவா உபுல் சந்தன ஜயசேகர மேற்படி காணியை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளார்கள்.*

மேற்சொல்லப்பட்ட 1 ஆவது அட்டவணைக் காணியை (0ஏ. 1றூ. 1.9பே.) 2015, மாச்சு 4 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கும்,

2 ஆவது அட்டவணைக் காணியை (1) லொட் 30 மற்றும் 31 (5ஏ. 0றூ. 0பே. ; ஹெக்டெயர் 2.020) ஐயும்,

(2) லொட் ஏ, பி (0ஏ. 0றூ. 5.50பே.) காணியையும் 2015, மாச்சு 6 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் என்னால் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2014.09.19 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும், ஏலவிற்பனை விளம்பரத்திற்காக 2015.02.06 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2015.02.06 ஆந் திகதிய ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடையும் விதம்.**- 1 ஆவது அட்டவணை.- யக்கல நகரத்தில் (மணிக்கூட்டுக் கோபுரம்) இருந்து கண்டி பிரதான றோட் (ஏ1) கொழும்பு பக்கம் 150 மீற்றர் சந்திரஜோதி பாடசாலை வரை சென்று வலதுபக்கம் திரும்பி ரிப்பல்வத்தை றோட்டில் 100 மீற்றர் சென்று மூன்று பக்கச் சந்தியை அடைந்து கடைசியாக இடதுபக்கம் திரும்பி 150 மீற்றர் சென்ற பிறகு காணியை அடைய முடியும். இது இடதுபக்கம் அமைந் துள்ளது.

2 ஆவது அட்டவணை.- பட்டுவன்ஹென பாடசாலை வரை சென்று இடதுபக்கம் திரும்பி பட்டுவன்ஹென றோட்டில் இஹலயொட 11 ஆவது லேன் வரை சென்று இந்த இஹலகொட 11 ஆவது லேனில் 100 மீற்றர் சென்று இடதுபக்கம் உள்ள றோட்டில் காணியை அடைய முடியும்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- வெற்றி பெற்ற கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;
(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) வெட் வரி.

*மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது அம்பாந்தோட்டை கிளையில் செலுத்த வேண்டும்.*

*வேறு விபரங்களுக்காக.-* முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 104ஏ, பிரதான வீதி, அம்பாந்தோட்டை. தொலைபேசி இல. : 047-2222887, 047-2222888-9 ; தொலைநகல் இல. : 047-2222890.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182, 3 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. : 011-2445393.
மின்அஞ்சல் : senaservice@sltnet.lk

2-158

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2015**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 06.02.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.01.2015 |
| | | வெள்ளி | 13.02.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.01.2015 |
| | | வெள்ளி | 20.02.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.02.2015 |
| | | வெள்ளி | 27.02.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.02.2015 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 06.03.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.02.2015 |
| | | வெள்ளி | 13.03.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.02.2015 |
| | | வெள்ளி | 20.03.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.03.2015 |
| | | வெள்ளி | 27.03.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.03.2015 |
| **ஏப்பிறல்** | .. | வியாழன் | 02.04.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.03.2015 |
| | | வெள்ளி | 10.04.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.03.2015 |
| | | வெள்ளி | 17.04.2015 | .. | நண்பகல் 12 | வியாழன் | 02.04.2015 |
| | | வெள்ளி | 24.04.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.04.2015 |
| | | வியாழன் | 30.04.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.04.2015 |

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.